1972 ஆகஸ்டு 22]

வகைகளையும் தயாரிக்க வடிசாலை ஒன்றை கோத்தகிரியில் அமைக்க, அண்மையில் அரசின் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. உரிமம் வழங்கு வதற்கு முன், வடிசாலை அமைப்பது, அதன் உற்பத்தித்திறன் ஆகிய விவரங்களை ஆயத்துறை ஆணையாளர் அந்நிறுவனத்தின் நிர்வாகிகளுடன் கலந்து ஆலோசித்து முடிவெடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்.

திரு. என். கே. பழனிசாமி : இப்பொழுது சர்க்கார் அனுமதியுடன் விற்கக்கூடிய சாராயத்தின் தரம் மிகவும் மோசமாக இருப்பதன் காரண மாக, உருளைக்கிழங்கு, முந்திரிப் பழம் போன்றவற்றிலிருந்து சாராயம் இறக்கி, அதன் மூலமாகத் தரத்தை உயர்த்துவதற்கு அரசு உத்தரவு இடுவார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : உறுப்பினருடைய கவலையைப் போக்குகின்ற வகையில்தான் உருளைக்கிழங்கிலிருந்தும் மற்றும் வேறு சில பொருள்களிலிருந்தும் இந்தச் சாராயம் இறக்குகின்ற தொழிலை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் ஊக்கம் அளிக்கும் வகையில் கோத்த கிரியில் அதற்கு அனுமதி அளித்திருக்கிறது.

வானொலி மூலம் உரையாற்றல்

*238 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

மாதம் ஒரு முறை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வானொலி மூலம் உரை வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையி லுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : விடுதலை நாள் விழா போன்ற நேரங்களிலும், நெருக்கடி நிலைமை போன்ற நாட்டு முக்கியத்துவம் வாய்ந்த நேரங்களிலும் முதலமைச்சர் வானொலி மூலம் மக்களுக்கு உரையாற்றுவது வழக்கம். ஆனால் மாதம் ஒரு முறை முதலமைச்சர் வானொலி மூலம் மக்களுக்கு உரை வழங்கும் செயற்குறிப்பு தற்போது பரிசீலனையில் இல்லை.

திரு. என். கிட்டப்பா : "மாநிலச் செய்தி" என்ற தலைப்பில் ஒலிபரப்பும் செய்திகளில்கூட நமது மாநிலத்தைப் பற்றிய செய்திகள் அதிகமாக ஒலிபரப்பப்படுவது இல்லை. எனவே, நமது அரசாங்கம் செய்கின்ற நல்ல திட்டங்களையும் உருவாக்குகின்ற நல்ல சட்டங்களையும் பொதுமக்களுக்குத் தெளிவாக எடுத்துக்கூற நமது முதலமைச்சரவர் களுக்கு அத்தகைய வாய்ப்பினை உருவாக்கிக்கொள்வதற்கு அரசு ஆவன செய்ய முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஒவ்வொரு துறையின் சார்பிலும் செய்யப்படுகிற சாதனைகளை எடுத்துச் சொல்லுகிற வகையில் அந்தந்தத் துறைகளினுடைய தலைவர்கள் அடிக்கடி வானொலியினுடைய அழைப்பின்

பேரில் சென்று உரை ஆற்றுகின்றார்கள். ஆகவே, முதலமைச்சரே மாதந்தோறும் சென்று வானொலியில் எடுத்துச் சொல்லவேண்டும் என்ற அவசியம் இருப்பதாகத் தெரியவில்லை.

திரு. ஆ. பரந்தாமன் : மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமிழகத்தில் உள்ள ஏழை எளிய மக்களுக்காகப் பல்வேறு திட்டங்களைத் தீட்டி செயல் படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட முதல்வர் அவர்களைப் பார்க்கவேண்டும் என்றும் அவர்களுடைய பேச்சைக் கேட்கவேண்டும் என்றும் மிகுந்த ஆவலோடு தமிழக மக்கள் இருக்கிறார்கள். அவர் களுடைய பேச்சைக் கேட்கும் வகையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் மாதத்திற்கொருமுறை வானொலி மூலமாக உரை நிகழ்த்துவார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : 1967-ம் ஆண்டிலிருந்து 1972-ம் ஆண்டு வரையிலான ஐந்தாண்டுக் காலத்தில் கிட்டத்தட்ட ஒரு இருபது தடவை வானொலியில் நான் பேசியிருக்கிறேன்; உரை நிகழ்த்தி யிருக்கிறேன். கவி அரங்கங்கள் போன்ற நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டிருக்கிறேன். ஐந்தாண்டுக் காலத்தில் இருபது தடவை கலந்து கொள்ளுவதற்குக்கூட எனக்கு நேரம் இல்லாமல் அதிகச் சங்கடப்பட்டி ருக்கிறேன். மாதமொரு முறை கலந்துகொள்வது என்பது இயலாத காரியம்.

திரு. நா. வீராசாமி : மாதம் ஒரு முறை கலந்துகொள்ள இயலவில்லை என்றாலும், விவசாயப் போராட்டங்கள் போன்ற போராட்டங்கள் நடை பெறுகின்ற நேரங்களில் அரசாங்கத்தின் கொள்கைகளை எடுத்துச் சொல்லவும் வன்முறையாளர்களைப்பற்றி நாட்டுக்குச் சொல்லவும் முதல மைச்சரவர்கள் வானொலியில் பேச முன்வருவார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அவசியப்படுகிற நேரங்களில் அவைகளை நிச்சயமாகப் புறக்கணிக்கமாட்டேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : அரசாங்கத்தின் சாதனைகளை ரேடியோ மூலம் விளம்பரம் செய்வதுபோல அரசாங்கத்தின் குறைகளை எடுத்துரைப்பதற்கும் எதிர்க்கட்சியினருக்கு வாய்ப்பு அளிக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதற்குப் பதில் சொல்கிற இடத்தில் நான் இல்லை.

திரு. சொ. காவேரிமணியம் : துணைத் தலைவர் அவர்களே, பொது வாக மத்திய அரசாங்கத்தினுடைய விளம்பர இலாக்கா வானொலியானா லும் சரி, அது தயாரிக்கக் கூடிய செய்திப் படங்களானாலும் சரி, தமிழக அரசு செய்திருக்கக் கூடிய சாதனைகளையும், நம்முடைய அமைச்சர்கள் கலந்துகொள்ளக்கூடிய நிகழ்ச்சிகளையும் அதிகமாக விளம்பரப்படுத்துவ தில்லை மற்ற மாநிலங்களில் செய்வது போல, என்பது இந்த அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறதா ?

1972 ஆகஸ்ட் 22]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அப்படி ஏதாவது குறைபாடு இருக்குமானால் இந்தக் கேள்விகள் எழுந்ததன் மூலம் வானொலி நிலையத்தார் திருத்திக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். அப்படி அதிகக் குறைபாடு இருப்பதாக எனது கவனத்திற்கு ஏதும் வரவில்லை.

திரு. த. சோலையா : தமிழக முதல்வர் இந்த நாட்டுக்கேற்ற நல்ல சட்ட திட்டங்களை உருவாக்கி அதன் மூலம் பயனடைகிற மக்கள் வானொலியின் மூலமாகப் பேச்சைக் கேட்பது மட்டுமல்லாமல் அவர்களை நேரடியாகப் பார்க்கும் அளவுக்கு டெலிவிஷன் அமைத்து, அதற்கு ஆவன செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : விரைவில் டெலிவிஷன் நிலையமொன்று நிறுவுவதற்கு அடிக்கல் நாட்டு விழா சென்னையில் நடைபெற இருக்கிறது.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.

*239 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :

தமிழகத்தில் உள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்களில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் எத்தனை பேர் ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மூவர்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினுள்ளவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள இடங்களில் மாவட்ட ஆட்சித் தலைவரின் விகிதாச்சாரம் அடங்கியுள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர்களை நியமிப்பதில் அது போன்ற விகிதாச்சாரம் எதுவும் கிடையாது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, முன்பெல்லாம் தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஒரு மாவட்ட ஆட்சித் தலைவர் பதவிதான் கொடுத்து வந்தார்கள். இந்த அரசாங்கம் வந்த பிறகுதான் மூன்றாக ஆக்கினார்கள் என்பது உண்மையா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : எத்தனை பேர் இருக்கவேண்டுமென்ற நிர்ணயம் இல்லை. அவ்வப்போது தேவைப்படுகிற நேரத்தில் யார் யார் எந்தெந்த மாவட்டத்தில் பணியாற்ற வேண்டுமென்பதை அரசு நிர்ணயிக்கும்.